திண்டுக்கல் மேற்கு மாவட்டம் நத்தம் சட்டமன்றத் தொகுதி கோட்டையூர் ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. வடக்கு ஒன்றிய அம்மா பேரவை செயலாளருமான சத்தியமூர்த்தி, சாத்தம்பாடி ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. தெற்கு ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற செயலாளருமான பழனிச்சாமி, ஆவிச்சிபட்டி ஒன்றிய குழு உறுப்பினர் அம்மாபொன்னு, சிறுகுடி ஒன்றிய குழு உறுப்பினர் சுரேஷ்குமார், புதுப்பட்டி ஒன்றிய குழு உறுப்பினரும் அ.தி.மு.க. வடக்கு ஒன்றிய துணைச் செயலாளருமான இந்திராசெல்வராஜ் மற்றும் முக்கிய நிர்வாகிகள் அக்கட்சியில் இருந்து விலகி திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளரும் உணவுத்துறை அமைச்சருமான அர.சக்கரபாணி முன்னிலையில் தங்களை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். உடன் நத்தம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆண்டி அம்பலம், திண்டுக்கல் மேற்கு மாவட்ட துணைச் செயலாளர் ராஜாமணி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட பொருளாளர் விஜயன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் முத்துக்குமாரசாமி, நத்தம் பேரூராட்சி தலைவர் சிக்கந்தர்பாட்ஷா, நத்தம் தெற்கு ஒன்றிய செயலாளர் ரத்தினக்குமார், நத்தம் வடக்கு ஒன்றிய செயலாளர் பழனிசாமி உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உடனிருந்தனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - முதல்வர் பிறந்தநாளையொட்டி - சிங்கம்புணரியில்

தென்னிந்திய அளவில் பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பரிசுகள் வழங்கினார்!

சிங்கம்புணரி, ஜூன், 16- சிங்கம்புணரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முதல்வர் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்னிந்திய அளவில் பெண்களுக்கான மாபெரும் மின்னொளி கபடி போட்டி மூன்று நாட்கள் நடைபெற்றது. போட்டியில் வெற்றி பெற்ற அணிக்கு சிறப்பு பரிசுகளை கூட்டுற வுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் வழங்கினார்.

சிங்கம்புணரியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தென்னிந்திய அளவில் மூன்றாம் ஆண்டு மாபெரும் பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி நடைபெற்றது.

தமிழகத்தில் ஐந்து முறை முதலமைச்சர் சிம்மாசனத்தை அலங்கரித்த முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 70 வது பிறந்த நாளை முன்னிட்டு சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி திராவிட முன்னேற்றக் கழக ஒன்றிய நகர மற்றும் சார்பு அணிகள் சார்பில் தென்னிந்திய அளவில் மாபெரும் மூன்றாம் ஆண்டு பெண்களுக்கான மின்னொளி கபடி போட்டி கடந்த 10.06.2023 - சனிக்கிழமை மற்றும் 11.06.2023 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 12.6.2021 திங்கட்கிழமை ஆகிய மூன்று தினங்கள் நடைபெற்றன.

மாபெரும் மின்னொளி கபடி போட்டியை கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் தொடக்கி வைத்தார். இந்த போட்டிக்காக சிங்கம்புணரி சேவகப் பெருமாள் அய்யனார் கோவில் பின்புறம் உள்ள கலையரங்கம் முன்புள்ள மைதானத்தில் பிரம்மாண்டமான முறையில் பாதுகாப்பு அம்சங்களோடு கலரி அமைத்து போட்டிகள் நடைபெற்றன.

தமிழகத்திலிருந்து பெரு நகரங்களில் இருந்தும் ஆந்திரா, கர்நாடகா, பாண்டிச்சேரி போன்ற மாநிலங்களில் இருந்தும் 18 அணிகள் போட்டியில் கலந்து கொண்டனர். சிங்கம்புணரியில் மூன்றாம் ஆண்டு நடைபெற்ற பெண்களுக்கான தென்னிந்திய அளவில் மின்னொளி கபடி போட்டி நிறைவு நாளான நேற்று அரை இறுதி மற்றும் இறுதிப் போட்டி நடைபெற்றது. முதல் பரிசு அமைச்சர் பெரியகருப்பன் சொந்த நிதியில் ரூ.1,00 70 ம் இரண்டாம் பரிசு பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து ரூ.75,0 70 மூன்றாம் பரிசு முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.என் சுரேஷ் சார்பில் ரூ.50,070 நான்காம் பரிசு பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில் சார்பில் ரூ.25,070 வழங்கினர்.

போட்டிக்கு நடுவராக புரோ கபடி நடுவர் சிவ னேசன் தலைமையிலான 16 பேர் கொண்ட குழுவினர் பணியாற்றினர்.

இப்போட்டியில் முதல் பரிசு அந்தியூர் சக்தி பிரதர்ஸ் அணிக்கும் இரண்டாவது பரிசு கர்நாடகா மாநிலம் மங்களூர் ஆழ்வார் அணிக்கும் மூன்றாவது பரிசு சிங்கம்புணரி தெக்கூர் எஸ்.எஸ்.ஏ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி அணிக்கும் நான்காவதாக ஒட்டன்சத்திரம் எஸ்.எம்.வி.கே.சி. அணி ஆகிய அணிகள் வெற்றி பெற்றனர்.

இதில் சிறந்த ரைடராக அந்தியூர் சக்தி பிரதர்ஸ் சௌந்தர்யாவுக்கும் சிறந்த தடுப்பாற்றல் வீரராக கர்நாடகா மங்களூர் ஆல்வாஸ் அணியைச் சேர்ந்த விருந்தாவிற்கும் வழங்கப்பட்டது.

வெற்றி பெற்ற அனைத்து அணிகளுக்கும் அமைச்சர் பெரிய கருப்பன் தன் திருக்கரங்களால வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு வெற்றி கோப்பைகள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கினார்.

மேலும் போட்டியில் பங்கெடுத்த தொடக்க முதல் இறுதி வரை ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெற்ற (மொத்தம் 31 முறை) அணிகளுக்கு தலா ரூ.5000 அமைச்சர் பெரிய கருப்பன் சொந்த நிதியில் இருந்து வழங்கினார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகள் சார்பில் விறுவிறுப்பாக நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் தென்னவன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அருணகிரி, மாவட்ட அவைத்தலைவர் கணேசன், மற்றும் வடக்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன், தெற்கு ஒன்றிய செயலாளர் பாலசுப்பிரமணியன், நகர அவைத்தலைவர் சிவக்குமார், சிங்கம்புணரி பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, சிங்கம்புணரி நகரச் செயலாளர் கதிர்வேல், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில், வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் சிவபுரி சேகர், தெற்கு ஒன்றிய துணைச் செயலாளர் முத்துக்குமார், நகர துணை செயலாளர் அலாவுதீன், மருத்துவர் அருள்மணி நாகராஜன், முன்னாள் சூரக்குடி ஊராட்சி மன்ற தலைவர் அனந்த கிருஷ்ணன்,

பொதுக்குழு உறுப்பினர் சோமசுந்தரம் , கழக பிரதிநிதி குடோன் மணி, தருண் மெடிக்கல் புக ழேந்தி, நகர பொருளாளர் செந்தில் கிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் மணப்பட்டி பாஸ்கரன் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் மனோகரன், சிங்கம்புணரி கிராம அம்பலம் சத்தியசீலன், மாவட்ட பிரதிநிதிகள் காளாப்பூர் செல்வகுமார், தனுஷ்கோடி, மாவட்ட மகளிர் அணி பவானி கணேசன், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் பிரேமா செந்தில், சுற்றுச்சூழல் மாவட்ட துணை அமைப்பாளர் காஞ்சனா, மகளிர் அணி அமைப்பாளர் நிர்மலா, தொண்டரணி அமைப்பாளர் ரமணி, சுந்தரி பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள் ஜெயக்குமார், மீனா மனேகரன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கதிர் காமம், மேலப்பட்டி தொழிலதிபர் சிவக்குமார், முறையூர் ஊராட்சி மன்ற தலைவர் சுரேஷ்,

ஒன்றிய கவுன்சிலர்கள், ரம்யா செல்வகுமார், வையாபுரி செந்தில், சென்னை ராமலிங்கம், பார்த்திபன், ஞானி செந்தில் ,மதிசூடியன், தொழில் நுட்ப பிரிவு சையது , அமுதன், பரிச்சி சரவணன், முரசொலி கார்த்திக், காங்கிரஸ் இலக்கிய அணி சிங்கை தருமன், காங்கிரஸ் நகர தலைவர் தாயுமானவன், பேச்சாளர் உதயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை சிங்கம்புணரி ஒன்றிய நகர தி.மு.க. மற்றும் சார்பு அணிகள் செய்திருந்தனர்.

ஆழ்வார் திருநகரியில்

ரூ.60 லட்சத்தில் அரசு திட்டப் பணிகள்!

அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்!

தூத்துக்குடி, ஜூன் 16 - தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி ஆழ்வார்திருநகரி யூனியன் பகுதியில் ரூ. 60 லட்சம் மதிப்பீட்டில் அரசு திட்டப் பணிகளை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்.

ஆழ்வார்திருநகரி யூனியன் சுகந்தலை ஊராட்சிக் குட்பட்ட வெள்ளைக் கோயில் பகுதியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ. 9.6 லட்சம் மதிப்பில் புதிய ரேசன் கடை அடிக்கல் நாட்டுதல் விழா நடைபெற்றது. குரும்பூரில் ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் அமைக்கும் சாலை பணி நடைபெற்றது. புறையூர் பஞ்சாயத்து நடுநிலைப் பள்ளியில் ரூ. 41 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டிடங்களை அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்.

இதில் அ.பிரம்மசக்தி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், பை.மூ.ராமஜெயம், ஜனகர், ஒன்றியச் செயலாளர் சதிஸ்குமார், வழக்கறிஞர் கிருபாகரன், கபடி கந்தன் மற்றும் தி.மு.க. கழக நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டனர்.

பீகார் மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அவர்களை பாட்னாவில் அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சந்தித்து திருவாரூர் மாவட்டம் காட்டூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.

பீகார் மாநில துணை முதலமைச்சர் தேஜஸ்வி யாதவை பாட்னாவில் அவரது இல்லத்தில் கழக துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா சந்தித்து திருவாரூர் மாவட்டம் காட்டூரில் கட்டப்பட்டுள்ள கலைஞர் கோட்டம் திறப்பு விழா அழைப்பிதழை வழங்கினார்.

செந்தில்பாலாஜியின் தலைமைச் செயலக அலுவலகத்தில் சோதனை

கூட்டாட்சிக்கு வேட்டு வைக்கும் செயல்!

பொன்குமார் கண்டன அறிக்கை!

சென்னை, ஜூன் 16 - தலைமைச் செயலகத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்துவது என்பது ஜனநாயகத்திற்கும் கூட்டாட்சிக்கும் வைக்கும் வேட்டாகும்.

செந்தில் பாலாஜி கைதுக்கு தமிழ்நாடு விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் அமைச்சர் அறையில் ஒன்றிய அரசின் அமலாக்கத் துறை சோதனை நடத்தியது கூட்டாட்சி தத்துவத்திற்கு வேட்டு வைக்கும் செயலாகும். இது வன்மையானக் கண்டனத்திற்குரியதாகும். ஒன்றிய அரசின் தலைமைச் செயலகமாக இருந்தாலும், மாநில அரசின் தலைமைச் செயலகமாக இருந்தாலும் அது மக்களுக்கான மிக உயர்ந்த கண்ணியமிக்க இடமாகும். அந்த இடத்தில் சோதனை நடத்துவது மக்களுக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கையை இழக்க செய்யும்.

அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் இல்லங்கள் எல்லாம் சோதனை நடத்திய மத்திய அமலாக்கத்துறை அதன் உச்சமாக தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்திலும் சோதனை நடத்தப்பட்டுள்ளது. இரவு முழுவதும் அமைச்சர் செந்தில் பாலாஜி இல்லத்தில் சோதனை நடத்தப்பட்டுள்ளது. பின்னர் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டுள்ளார்.

காட்டுத்தனமான நடவடிக்கை!

சோதனை நடத்துவதற்கான அறிவிப்பையோ, கைது செய்வதற்கான காரணத்தையோ அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தாருக்கும் தெரியப்படுத்தாமல் மர்மமான முறையில் சோதனைகள் நடத்துவது, கைது செய்வது என்பதெல்லாம் காட்டுத்தனமான ஆட்சியின் நடவடிக்கையாகும். பாரதிய ஜனதா கட்சி ஆட்சியின் ஜனநாயக விரோத செயல்பாடுகளை துணிச்சலாக எதிர்த்து செயல்படக் கூடிய ஒரே தலைவராக இந்திய அளவில் திராவிட முன்னேற்றக் கழக தலைவரும் தமிழ்நாடு முதல மைச்சரான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் இருப்பதை இந்த நாடறியும். மோடிக்கு இணையாக கருதப்படக் கூடிய உள்துறை அமைச்சர் அமித்ஷா அவர்கள் சென்னை வந்த பொழுது முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் அவரது பிடரியில் அடிப்பதைப் போன்று தமிழ்நாட்டுக்கு இதுவரை ஒன்றிய அரசு செய்தது என்ன என்ற பட்டியலை விளக்குவாரா? என்ற ஒரு கேள்வியை எழுப்பி, பாரதிய ஜனதா கட்சிக்கு தான் ஒரு அங்குசம் என்பதை தி.மு.க.வும் தலைவர் தளபதியார் அவர்கள் தெரியப்படுத்தினார்.

தன்னை எதிர்க்கக்கூடிய கட்சி எதுவாக இருந்தாலும் தன்னுடைய கட்சியினுடைய ஆட்சி எந்த மாநிலத்தில் இல்லையோ அந்த மாநிலத்தினுடைய ஆட்சிக்கும் அந்த ஆட்சியை நடத்தும் கட்சிக்கும் ஒன்றிய அரசின் நடுநிலை அமைப்புகளான சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறை போன்ற வற்றை பயன்படுத்தி சோதனைகள் நடத்தி கைதுகளை அரங்கேற்றி அவர்களை பணிய வைப்பது மோடி அரசின் தொடர் நடவடிக்கையாக இருப்பதை நாம் பல்வேறு மாநிலங்களில் பல்வேறு காலங்களில் பார்த்து வருகிறோம்.

அந்த அடிப்படையில் தமிழ்நாட்டு அரசுக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் இந்த சோதனையும், கைதும் நடந்துள்ளது. இதன் மூலம் தளபதியார் அரசுக்கு களங்கத்தை ஏற்படுத்தி விடலாம் எனவும், தி.மு.க.வை பணிய வைத்து விடலாம் எனவும் மோடி நினைத்தால் அது பகல் கனவாக மாறிவிடும். தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் முத்துவேல் கருணாநிதியினுடைய மகன் என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். ஏற்கனவே சோதனைகள் நடத்தப்பட்ட பொழுது அமைச்சர் செந்தில் பாலாஜி அவர்கள் ஓடி ஒளிந்து விடாமல் மிகத் தெளிவாக எத்தனை சோதனைகள் நடந்தாலும் ஒத்துழைப்பு அளிக்க தயாராக உள்ளேன். எத்தனை பிரச்சினைகளை எழுப்பினாலும் அதற்கு உரிய விளக்கத்தை அளிக்கவும் தயாராக உள்ளேன் என்று கூறிய பின்னர், மர்மமான முறையில் சோதனை நடத்துவது, இரவு முழுவதும் அமைச்சர் செந்தில் பாலாஜியையும் அவரது குடும்பத்தாரையும் மன அழுத்தத்திற்கும், உளைச்சலுக்கும் ஆளாக்கி அதிகாலையில் அவசர அவசரமாக கைது செய்ய வேண்டிய அவசியம் என்ன? செந்தில் பாலாஜி என்ன சர்வதேச தீவிரவாதியா?.

இப்படிப்பட்ட ஜனநாயகமற்ற மோடி அரசின் செயல்களை யார் எதிர்த்தாலும் எங்களுடைய நடவடிக்கை இப்படி கடுமையாகத் தான் இருக்கும். அவற்றை நீங்கள் சந்தித்தாக வேண்டும் என்று மிரட்டி பணிய வைக்கும் பாணியாகும். குறிப்பாக கர்நாடக மாநில சட்டப் பேரவைத் தேர்தலில் மண்ணை கவ்விய பாரதிய ஜனதா கட்சி தன்னுடைய தோல்வியின் தொடக்கத்தை உணர்ந்துள்ளது. அதனைத் தொடர்ந்து அகில இந்திய அடிப்படையில் அனைத்து எதிர்க்கட்சிகளின் ஒற்றுமை ஓங்கி உயர தொடங்கியுள்ளது. இந்த நிலையில் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி உறுதி என்பதை உணர்ந்து கொண்ட பாரதிய ஜனதா கட்சி புற வழியாக தன்னை எதிர்ப்பவர்களை மிரட்டி பணிய வைத்து எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையை சிதைத்திடும் பணியில் இறங்கி உள்ளது.

தக்க பாடம் புகட்டுவார்கள்!

தமிழ்நாட்டில் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் கல்வி, சுகாதாரம், தொழில் போன்ற அனைத்து நிலைகளிலும் இந்தியாவில் முதன்மை மாநிலமாக வருவதால் மக்கள் ஏகோபித்த ஆதரவினை இந்த அரசுக்கும் முதல்வருக்கும் அளித்து வருகிறார்கள். தமிழ்நாட்டில் ஒரு பிடி மண்ணை கூட எடுக்க முடியாத பாரதிய ஜனதா கட்சி இப்படிப்பட்ட புறவழி செயல்கள் மூலம் கால் பதிக்க முடியுமா? என கனவு காண்கிறது. இதற்கு அமித்ஷா அண்ணாமலையை ஒரு கருவியாக பயன்படுத்துகிறார். அண்ணாமலை, அமித்ஷாவின் கூட்டு சதி தான் இந்த சோதனை மற்றும் கைதுக்கு காரணம். செந்தில் பாலாஜி அவர்களை கைது செய்வதன் மூலம் கொங்கு மண்டலத்தில் மீண்டும் கொடி நாட்டலாம் என கனவு கண்டால் அது பலிக்காது. இந்த செயல்களை எல்லாம் மக்கள் மன்றம் உன்னிப்பாக கவனித்து வருகிறது. 2024 இல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் பாரதிய ஜனதாவுக்கு தக்க பாடத்தை புகட்டுவார்கள். ஒன்றியத்தில் மோடி தலைமையிலான பாரதிய ஜனதா கட்சி ஆட்சி அமைந்த பிறகு ஜனநாயகம் கொஞ்சம் கொஞ்சமாக நசுக்கப்பட்டு சர்வாதிகாரத்தை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. உலகின் தலைசிறந்த ஜனநாயக நாடான இந்தியாவில் சர்வாதிகாரத்தை நிலை நாட்ட முயற்சிக்கும் மோடி அரசின் தகடு தத்த வேலைகள் செல்லுபடி ஆகாது. இந்த செயல் வன்மையான கண்டனத்துக் குரியது.

இவ்வாறு பொன்குமார் தெரிவித்துள்ளார்.

கழக மீனவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா! அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் - இரா.பெர்னார்டு வழங்குகிறார்!

குழந்தைகளுக்கு நல உதவிகள் - மருத்துவ மாணவர்களுக்கு கல்வி நிதி!

இரா.மதிவாணன் - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, -மு.தம்பிதுரை - வீ.பி.பொன்னரசு - ஆர்.பத்மநாபன் - அருமை ராசகோபால் முன்னிலை!

சென்னை, ஜூன் 16 - தமிழினத் தலைவர் ,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளை சிறப்பிக்கும் விதமாக கழக மாநில மீனவர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகளை மாநில மீனவர் அணி தலைவரும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினருமான மிசா. இரா.பெர்னார்டு வழங்குகிறார்.

தமிழக முதல்வர், மீனவர்களின் பாதுகாப்பு அரண் தளபதி அவர்களின் அறிவிப்பின் படி முன்னாள் முதல்வர், தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக மீனவர் அணி சார்பில் சென்னை,முகப்பேர், மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவ மனையில், நாளை (17.6.2023) காலை 11 மணியளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

நலத்திட்ட உதவிகளை கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் கழக மீனவர் அணி தலைவர் மிசா இரா.பெர்னார்டு வழங்குகிறார்.

கழக மீனவர் அணி துணைத் தலைவர்கள் இரா.மதிவாணன், கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மீனவர் அணி துணை செயலாளர்கள் மு.தம்பிதுரை, வீ.பி.பொன்னரசு, ஆர்.பத்மநாபன், ஜெயப்பிரகாஷ், புளோரன்ஸ், ஜீட் மற்றும் அருமை ராசகோபால்,தொழிலதிபர் செங்குன்றம் த.இளையராஜா முன்னிலை வகிக்கின்றனர்.

குழந்தைகளுக்கு நல உதவி!

சென்னை மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவ மனையில் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட குழந்தைகளுக்கு நல உதவிகள் மீனவர் அணி சார்பில் வழங்கப்படுகிறது. நிகழ்வில் மருத்துவர்கள், சமூக நல அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

மருத்துவப் படிப்புக்கு கட்டணம்!

சென்னை மருத்துவ கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் கோகுலுக்கு தொடர்ந்து இந்த ஆண்டு கல்வி உதவித்தொகை ரூ.30,000 மற்றும் கரூர் அரசு மருத்துவ கல்லூரியில் மூன்றாமாண்டு பயிலும் மாணவர் யோகேஷ் வரனுக்கு தொடர்ந்து இந்த ஆண்டு கல்வி கட்டணம் ரூ. 30,000 மற்றும் உயர்கல்வி நீட் தேர்வு பயிற்சிக்கான கட்டணம் ரூ. 60,000 கல்வி உதவித்தொகைகளை கழக மீனவர் அணி தலைவர் மிசா இரா. பெர்னார்டு வழங்குகிறார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கும் ஒருங்கிணைப்பு பணிகளை சென்னை தெற்கு மாவட்ட கழக மீனவர் அணி துணை அமைப்பாளரும்,சன் ரைட் உதய நிதி ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவருமான தமிழ் வளன் பெர்னார்டு மற்றும் அரிமா.செந்தில் செய்து வருகின்றனர்.

சத்தீஸ்கரில் பள்ளிகளுக்கான கோடை விடுமுறை நீட்டிப்பு:

சுட்டெரிக்கும் வெயிலால் நடவடிக்கை!

ராய்ப்பூர், ஜூன் 16 - சத்தீஸ்கரில் கோடை விடுமுறைக்குப் பின் பள்ளிகள் 16ந்தேதி (இன்று) திறக்கப்படுவதாக இருந்தது. ஆனால் மாநிலத்தில் கோடை வெயிலின் தாக்கம் இன்னும் குறைய வில்லை.

அத்துடன் வெப்ப அலையும் நீடிப்பதால் மக்கள் பெரும் துயருக்கு ஆளாகி வருகின்றனர்.

எனவே மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு பள்ளிகள் திறப்பை மாநில அரசு தள்ளி வைத்திருக்கிறது.

அதன்படி வருகிற 26ந்தேதி வரை கோடை விடுமுறை நீட்டிக்கப்படுவதாக மாநில அரசு அறிவித்து உள்ளது.

முதல்மந்திரி பூபேஷ் பாகேல் அறிவுறுத்தலின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாகவும், இது தொடர்பாக மாநில பள்ளிக்கல்வித்துறை விரைவில் அறிவிப்பு வெளியிடும் எனவும் மாநில அரசு அதிகாரிகள் தெரிவித்தனர்.